1979 மார்ச் 7]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்பக் கட்டுப்பாடு முதலிய கொள்கைகளை பிரசாரம் செய்கிற காட்சிகள் வருகிற திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளதா ? மது விலக்கில் உறுதியாக இருக்கிறது எனப்படும் இந்த அரசு கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் மதுவிலக்கு பிரசாரம்செய்யும், பேரறிஞர் அண்ணா அவர்களின் திரைப்படமாகிய ''நல்லதம்பி'' மூலமாக நல்லமுறையில் பிரசாரம் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே குறிப்பிட்ட அந்த ''நல்லதம்பி'' படத்தினை எல்லா முக்கிய நகரங்களிலும், பகுதிகளிலும் ஓரிரு நாட்களாவது இலவசமாக நடத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனையை இந்த அரசு ஏற்றுக் கொள்ளத்தடை இல்லை என்று சொல்கிறேன். ''நல்லதம்பி'' படத்தை அவர்கள் பார்த்து வெகுநாட்களாகிற்று என்று கருதுகிறேன். ''நல்லதம்பி''யில் அவர்கள் மதுவிலக்கு பிரசாரம் மட்டும் செய்யவில்லை. ஏழை, பணக்காரர் என்ற பிரசாரத்தையும் செய்திருக்கிறார்கள். அதுவும் இப்போது தேவை. அதை ஏற்றுக் கொள்கிறேன்.

கோடிக்கரை பகுதியினை சுற்றுலா மையமாக்கல்:

*வினா எண். 263— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தொகுதி கோடிக் கரையினை சுற்றுலா மையமாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

(ஆ) எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தொகுதி கோடிக்கரையினை சுற்றுலா மையமாக்க தற்போது எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.

[1979 மார்ச் 7

திரு. இரா. தாமரைக்கனி ; உலகத்திலே அதிக அளவில் கோடிக்கரையில்தான் அதிகமான பறவைகளும், மான்களும் இயற்கையாக உலாவிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த இடத்தை ஒரு சுற்றுலா மையமாக்க மீண்டும் அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்தக் கோடிக்கரைப் பகுதி மான்களும், பறவைகளும் கொண்ட சரணாலயமாக இப்போது வனத்துறை சார்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சுற்றுலாத் துறையின் சார்பில், அக்கறை செலுத்துகிற அளவில் முக்கியமான சாலைவசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் அப்படிப் பட்ட இடங்களை சுற்றுலா மையங்களாக எடுத்துக்கொள்ள இப்போது அரசாங்கம் உத்தேசிக்கவில்லை என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : இந்தக் கோடிக்கரையிலிருந்து தான் இராவணன் இலங்கைக்குப் போனதாகச் சொல்கிறார்கள். அங்கு ஒரு முள்செடி இருக்கிறது, அதை மக்கள் இராவணன் மீசை என்று சொல்கிறார்கள். ஆதலால் அந்த முள்செடியை சுற்றுலாப் பொருட்காட்சிகள் எங்கெங்கு நடக்கிறதோ அங் கெல்லாம் வைப்பதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்த முள்செடியைக் கொண்டுபோய் வைக்கிற இடங்களிலெல்லாம் அதற்கு வேண்டிய விளக்கத்தைத் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டால் அந்த முயற்சிபற்றி அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9—30]

திரு. கோ. இளங்கோவன்: தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகள் சுற்றுலா இடங்களாக 1978—79-ல் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதையும், அங்கு என்னென்ன வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரசினுடைய சுற்றுலாத் திட்டங்களாக எந்தெந்த பகுதிகள் இணைக்கப் பட்டிருக்கின்றன என்கின்ற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. என்றாலும் பேராவூரணிக்கு அருகில் உள்ள 'மனோரா' போன்ற இடங்களையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் சுற்றுலாப் பகுதிகளாக ஏற்படுத்தலாம் என்பதற்காக திட்டமிடப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.